**செ.வெ.எண்: 43** **நாள்: 20.10.2021**

**தீபாவளி பண்டிகைக்கு தற்காலிக வெடிபொருள் உரிமம் பெற ஆன்லைன் (Online) மூலமாக வணிகர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

2021-ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்கான வெடிபொருள் தற்காலிக உரிமம் ஆன்லைன் (Online) மூலமாக விண்ணப்பித்திட காலக்கெடு நீட்டித்து, அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே வணிகர்கள் இவ்வாண்டு தீபாவளி பண்டிகைக்கான தற்காலிக வெடிபொருள் உரிமத்திற்கான விண்ணப்பத்தினை பின்வரும் ஆவணங்களான கட்டிடத்தின் நீலவரைபடம், இட உரிமத்திற்கான ஆவணம், வெடிபொருள் உரிமம் தலைப்பில் அரசு கணக்கில் ரூ.500/- செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு, முகவரிக்கான ஆதாரம் (ஆதார் அட்டை, பான்கார்டு, குடும்ப அட்டை/ஸ்மார்ட் கார்டு), சொத்துவரி செலுத்தியதற்கான ரசீது மற்றும் கடவுச்சீட்டு (Passport) அளவுள்ள புகைப்படம் 2 ஆகியவற்றுடன் அரசு இ-சேவை மையங்கள் மூலமாக விண்ணப்பம் செய்து தீபாவளி பண்டிகைக்கான தற்காலிக வெடிபொருள் உரிமம் பெற்றுக்கொள்ள, ஆன்லைன் மூலமாக 22.10.2021 வரை விண்ணப்பங்கள் பெறப்படும் எனவும், அதற்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதன் மூலம் வணிகர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**